8. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2012) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-*தொடர்ச்சி*

(இ) சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2012). மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2012)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ *1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*